# வடக்கு மாகாண பொதுச் சேவையின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III மற்றும் பயிற்சித் தரம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - *2020*

வடக்கு மாகாண பொதுச்சேவையின் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இல் காணப்படும் ***65*** பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சையானது வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் அவர்களால் ***2021* தை மாதம்** யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி ***18.12.2020*** ஆகும்.

| பதவிப் பெயர் | பதவி இல | வெற்றிடம் |
|---|---|---|
| கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் IIIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2020 | ***01*** | ***65*** |
| கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை -2020 | ***02*** | |

## *02* ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :-

*02.1* வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் சேவையின் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கும், அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு அமையவும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள், நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1817/30ஆம் இலக்க 2013.07.03ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட வடக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவை ஆகியவற்றிற்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகள் குறித்த பதவியின் **தரம் III அல்லது பயிற்சித் தரத்திற்கு** நியமிக்கப்படுவர்.

*02.2* திறந்த போட்டிப் பரீட்சையின் மூலம் நியமனத்திற்கு தேர்வு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் நியமனத்திகதியிலிருந்து மூன்றுவருடங்களிற்கு தகுதிகாண் அடிப்படையில் தரம் III பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டவாறு கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 03வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

*02.3* இச் சேவை இடமாற்றத்திற்குட்பட்ட சேவையாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனைக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

*02.4* பொது நிர்வாக சுற்றறிக்கை *01/2014* மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கமைய நியமனத் திகதியிலிருந்து *05* வருடங்கள் முடிவதற்கு முன்னர் குறித்துரைக்கப்பட்ட இரண்டாவது அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

*02.5* நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் அமுலுக்கு வரும் திகதி என்பன நியமன அதிகாரியினால் வரையறுக்கப்படும். அறிவிக்கப்பட்ட வெற்றிடங்கள் தொடர்பில் சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்பாது விடுவதற்கான அதிகாரத்தினை நியமன அதிகாரி கொண்டுள்ளார்.

## *03* சம்பளஅளவுத்திட்டம் :-

### *03.1* கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இற்குரியது :-

பொது நிர்வாகச் சுற்றறிக்கை *03/2016*க்கு அமைவான, சம்பளத் தொகுதி **MN 3- 2016**க்கு ஏற்ப கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் சேவையின் தரம் - III ற்கான திரட்டிய சம்பள விகிதமானது ரூபா **31, 040 – 10 x 445 - 11 x 660 - 10 x 730 – 10 x 750 – 57, 550/-**ஆகும். (ரூபா *32,375* சம்பள படிநிலைக்கு முன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையில் சித்தி பெறல்வேண்டும்) எவ்வாறாயினும் மேற்படி சுற்றறிக்கையின் அட்டவணை –II இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

### *03.2*கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்குரியது :-

பொது நிர்வாக சுற்றறிக்கை *03/2016*க்கு அமைவாக, அச் சுற்றறிக்கையின் **அட்டவணை V** இல் கூறப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு ஏற்ப மாதாந்தப் படி மற்றும் சீராக்கற்படி என்பன வழங்கப்படும்.

*1*ம் ஆண்டு - ரூபா *27,140.00*
*2*ம் ஆண்டு - ரூபா *27,440.00*

## *04* பொதுவான தகைமைகள்:-

*04.1* விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

*04.2* விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். இவ் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு உடன் முன்னர் உள்ள ஆறு (06) ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (05) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

**(*நேர்முகப் பரீட்சையின் போது தமது தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)**

*04.3* விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் கடமையாற்றக் கூடிய சிறந்த தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

*04.4* விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று (18.12.2020) அல்லது அதற்கு முன்னர் இப்பதவிக்காக கோரப்பட்ட **சகல தகைமைகளையும்** கொண்டிருத்தல் வேண்டும்.

*04.5* விண்ணப்பதாரி விண்ணப்பத்தை ஏற்கும் இறுதித் திகதியன்று (18.12.2020) ***18* வயதிற்கு குறையாதவராகவும், *30* வயதிற்கு மேற்படாதவராகவும்** இருத்தல் வேண்டும்.

## *05* கல்வித் தகைமைகள் :-

### *05.1* கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்குரிய தகைமைகள் :-

க.பொ.த (சா/த)பரீட்சையில் **ஒரே அமர்வில்** மொழி (தமிழ் / சிங்களம் / ஆங்கிலம்), **கணிதம்,** விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

க.பொ.த (உ/த) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், விவசாயம், பௌதீகவியல், உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்கள் உட்பட மூன்று (03) பாடங்களில் **ஒரே அமர்வில்** சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

(பழைய பாடத்திட்டமாயின் மூன்று (03) பாடங்கள் சித்தியடைந்திருத்தல் போதுமானதாகும்)

### *05.2* கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இற்குரிய தகைமைகள் :-

மேலே **பந்தி *05.1*** இல் கூறப்பட்ட தகைமைகளுடன் பின்வரும் தொழிற்த் தகைமைகளில் ஏதாவது ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

01. அநுராதபுரம், குண்டசாலை ஆகிய விலங்கு பரிபாலன பயிற்சிப் பாடசாலைகளில் அல்லது விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள வேறு ஏதாவது பயிற்சிப் பாடசாலைகளில் இருந்து **"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) சம்பந்தமான இரண்டு வருட கற்கைநெறியில் டிப்ளோமாச் சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

02. இலங்கையின் ஏதாவதொரு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கீழுள்ள அரச பயிற்சி நிறுவனத்தினால் **"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) சம்பந்தமான இரண்டு வருட கற்கைநெறியில் டிப்ளோமாச் சான்றிதழினை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

03. மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட**"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) சம்பந்தமான இரண்டு வருட கற்கைநெறியில் டிப்ளோமாச் சான்றிதழ் அல்லது **"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) பற்றிய பாடத்திட்டத்தை உள்ளடக்கிய தேசிய தொழிற்பயிற்சி **தகைமை மட்டம் *6* (NVQ 06)** அல்லது அதற்கு மேலான மட்டத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

*04.* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட**"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) தொடர்பான பட்டம் அல்லது தேசிய தொழிற்பயிற்சி **தகைமை மட்டம் 6 (NVQ 06)** இற்கு குறையாத**"விலங்கு பரிபாலனம்"**(Animal Husbandry) தொடர்பான பாடத்திட்டத்தை உள்ளடக்கிய பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

## *06* ஆட்சேர்ப்பு முறை *:-*

*06.1* எழுத்துப் பரீட்சை மூலம் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிக்கு அமைவாகவும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின்போது பரிசீலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையெனத் தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப்பரீட்சையின் போது சகல தகைமைகளும், ஆவணங்களும் பரிசீலிக்கப்படும். இதன் போது புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

*06.2* கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் போதியளவு கிடைக்காத சந்தர்ப்பங்களில் மட்டும், விளம்பரத்தின் **பந்தி 05.1 இல்** கூறப்பட்ட தகைமைகளைக் கொண்ட பரீட்சார்த்திகள் **கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு** சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

*06.3* நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பதவியணியில் காணப்படும் ஆகக்கூடியது 60% ஆன வெற்றிடங்களே **பந்தி 05.1 இல்** கூறப்பட்ட தகைமையுடைய தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்திகள் மூலம் நிரப்பப்படும்.

*06.4* கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் பயிற்சித் தரத்திற்கு நியமிக்கப்படுபவர்கள் (உள்வாங்கப்படுபவர்கள்) விலங்கு பரிபாலனத்தில் **(பந்தி 05.02 ல் குறிப்பிடப்பட்ட நிறுவனங்களில்)** டிப்ளோமா பாடநெறியினை நிறைவு செய்ததன் பிற்பாடு அமுலில் உள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைவாக கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் தரம் III இற்கு நியமிக்கப்படுவார்கள்.

*06.5* மேற்படி தகைமையடைந்துள்ள விண்ணப்பதாரிகளிலிருந்து, எழுத்துப்பரீட்சையில் தகைமைபெறும் பரீட்சார்த்திகள் பெற்ற மொத்தப்புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கில் காணப்படும் வெற்றிடத்திற்கமைவாக நியமனத்திற்காகத் தெரிவு செய்யப்படுவர்.

*06.6* வெற்றிடத்தின் *03%* மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும்.

## *07* பரீட்சைக் கட்டணம் *:-*

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா ***500.00*** ஐ ***"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்"*** அவர்களின் ***"3401"*** என்ற வைப்புக் கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப் படிவத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதுடன் இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படவும் மாட்டாது.

## *08* விண்ணப்பிக்கும் முறை *:-*

*08.1* இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ x 29செ.மீ) தாளின் 1 முதல் 10 வரையான பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை மறுபக்கங்களிலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரித்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **18.12.2020**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, "**செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம்,**

**இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*08.2* அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் பயிற்சித் தரம் /தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2020"** எனக் குறிப்பிடப்படல் வேண்டும்

*08.3* விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பி வைக்கப்படும். **பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்பட்டமையானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் என ஏற்றுக்கொள்ளப்பட்டமையாகாது.**

*08.4* விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னர்வரை அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி கீழ்க்குறிப்பிடப்படும் விபரங்களுடன் **"செயலாளர், மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.(தொலைபேசி இல *–021 221 9939*, தொலைநகல் இல *-021 221 9940)*

**தொடர்பு கொள்ளும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய விபரங்கள்:-**

கோரிக்கைக் கடிதம், விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப்பிரதி மற்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்திய பிரதி, அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற்கான தொலைநகல் இலக்கம்.

## *09* ஆள் அடையாளத்தை நிரூபித்தல் :

பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள்அடையாள அட்டை
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.
(iii) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேற்குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றை சமர்ப்பிக்கத்தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்தி உரிமை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் அவர்களின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும்.

## *10* பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்பப்பத்திரங்களைப் பூர்த்தி செய்யும்போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின்போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் எனத் தெரியவருமாயின், அவரது பரீட்சார்த்தியுரிமை அச்சந்தர்ப்பத்தில் இரத்துச் செய்யப்படும். விண்ணப்பதாரி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதென நியமனத்தின் பின் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

*11* **பரீட்சைத் திட்டம்** :-

இப் பரீட்சை கீழ்வருமாறு இரண்டு வினாத்தாள்களைக் கொண்டிருக்கும். இது தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பித்த மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| இல | வினாப் பத்திரம் | பாட விதானம் | நேரம் | புள்ளிகள் |
|---|---|---|---|---|
| *01* | பொது உளச்சார்பு | இவ்வினாத்தாளானது தர்க்கிக்கும் திறன், பகுத்தாய்வு முறை சார்ந்த திறன், முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றுடன் எண், மொழி மற்றும் வடிவக் கட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடையிலான விண்ணப்பதாரியின் திறனை அளவிடுவதாக அமையும். | *01* மணித்தியாலம் | *100* |
| *02* | விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பவியல் பரீட்சை | இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரிகளின் புத்தாக்க சிந்தனைச் சக்தி மற்றும் கால்நடை வளர்ப்புத் தொடர்பான பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன் ஆகியவற்றினை உள்ளடக்கியதான வினாக்களைக் கொண்டிருக்கும். | *01* மணித்தியாலம் | *100* |

குறிப்பு :-

இப்பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருப்பதால் நியமனத்திற்கு தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் குறைந்தபட்சம் நாற்பது வீதத்தை (40%) பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ள வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது விண்ணபதாரிகள் பெற்ற மொத்தப் புள்ளிகளின் உயர்வரிசை ஒழுங்கு (Merit Order) கருத்தில் கொள்ளப்படும்.

*12.* **பரீட்சைப் பெறுபேறுகள்** :-

*13.* பரீட்சார்த்திகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களால் www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபை இணையத்தளம் மூலம் வெளியிடப்படும். பின்னர் பரீட்சைக்குத் தோற்றிய ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தபால் மூலமாக அனுப்பிவைக்கப்படும்.

*14.* இப் பரீட்சையை நடாத்துதல் அல்லது இரத்துச் செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு. இவ் விளம்பரத்தில் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழி உரைகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படும் பட்சத்தில் தமிழ் மொழி உரையே மேலோங்குதல் வேண்டும்.

**சி.திருவாகரன்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவைஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
***18.11.2020***